பேருந்து நிலையத்தை மாற்றி செயின்ட் தாமஸ் மவுண்ட் கிராமத்திலுள்ள நகர பேருந்து நிலையமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையோடு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நகரத்திற்குள்ளே இருக்கின்ற நெருக்கடியைக் குறைப்பதற்கு சென்னைப் பெருநகர் குழுமம் பெருநகர் வளர்ச்சிக்காக ஜி. எஸ். டி. சாலை வழியில் பேருந்து நிலையம் மற்றும் வாகனங்கள் நிறுத்தம் அமைப்பதற்கு வேறு ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். பொருத்தமான இடம் கிடைத்த உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பணிமனை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டு இருக்கிற அந்த இடத்திற்குப் பக்கத்திலே பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் உகந்ததாக இருக்கிறது என்பதை ஆதாரமாகத் தந்தால் இந்த அரசு அந்த இடத்தில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யுமா என தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிமனைக்கு அடிக்கல் நாட்டு விழாவிற்கு சென்ற நேரத்தில்தான் பக்கத்திலே கிட்டத்தட்ட 50 ஏக்கர் புறம்போக்கு நிலம் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடத்தில் சொல்லப்பட்டு அவைகள் எல்லாம் சர்வே செய்யப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த சர்வே முடிந்த உடன் அந்த நிலங்களை மீட்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக டெப்போ அமைத்தல்

*8388 திரு. குமரி அனந்தன் :
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக்கழக டெப்போ (Depot) அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

)ஆ) கேள்விக்கு இடமில்லை.

1990 ஆகஸ்டு 22]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சாத்தான்குளம் ஒரு தாலுக்காவினுடைய தலைநகரமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே பஸ் டெப்போ ஒன்று அமையவேண்டுமென்று நீண்ட நாளைய கோரிக்கை மக்களிட மிருந்து வந்திருக்கிறது. அநேகமாக அமைகிறது என்று சொல்லுகிற தகவல் கூட எங்களுக்கு வந்திருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதை பரிசீலித்து அந்த பஸ் டெப்போ அமைவதற்கும், பஸ்களை பழுதுபார்க்கின்ற நிலையம் கூட அமைவதற்கும் ஏற்பாடு செய்வதற்கு மீண்டும் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளத்திலிருந்து 27 கிலோ, மீட்டர் தூரத்திலுள்ள திருச்செந்தூரில் ஒரு பணிமனையும் இன்னொரு பணிமனை 29 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஸ்ரீவைகுண்டத்திலும் ஏற்கெனவே அமைந்திருக்கிறது. இருந்தாலும் ஒரு பணிமனையை அமைக்கவேண்டும் என்று சொன்னால் குறைந்தபட்சம் 15 பேருந்து களாவது அந்த நகரத்திலிருந்து புறப்பட்டுச் செல்லவேண்டிய நிலைமை இருந்தால்தான் பணிமனைகளை அமைப்பதற்கான தகுதிகள் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை மீண்டும் பரிசீலனை செய்து பணிமனை அமைப்பற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தப் பணிமனை அமைப்பதற்கு மீண்டும் பரிசீலிக்கிறேன் என்று சொன்னதற்கு மனதில் எழுகின்ற உவகையோடு சேர்த்து சாத்தான்குளம் தொகுதியில் இந்தப் பணிமனை அமைகின்ற போது நமது போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினாலும் சரி, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினாலும் சரி—மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டுவதாக ஒரு செய்தி வந்ததால் சொல்கிறேன்— சாத்தான்குளத் திலே வந்து அடிக்கல் நாட்டுகின்ற ஒரு வாய்ப்பு ஏற்பட்டால் அவர்களை நாங்கள் வரவேற்கின்ற ஒரு பெருமை தரப்படும். ஏன் என்றால் வறண்டப் பகுதியை அவர்கள் பார்த்து சாத் தான் குளத்தில் விழமாட்டான் என்று ஏற்கெனவே எனக்குக் கொடுத்த உறுதிமொழியை அங்கே நிறைவேற்றி அதை ஒரு வறண்ட பகுதியாக, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கின்ற வாய்ப்பும் கிடைக்கும். ஆகவே, நமது மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களே விரைவிலே வந்து அடிக்கல் நாட்ட வேண்டுமென்ற எங்களுடைய வேண்டுகோளை அவர்கள் ஏற்பார்களா என அறிய விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமான கோரிக்கையாக இருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

தாய்சேய் நல விடுதி.

*8332 **திரு. ஆ. அறிவழகன் :**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், சிந்தலவாடி கிராமத்தில் உள்ள புனவாசிப்பட்டியில் தாய்சேய் நல விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிந்தலவாடி கிராமம் வீடு கட்டி துணை சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. புனவாசிப்பட்டி கிராமம் மத்திப்பட்டி துணை சுகாதார நிலையத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. எனவே சிந்தலவாடி மற்றும் புனவாசிப்பட்டி கிராமங்களில் தனியாக துணை சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற் குறிப்புகள் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சித்த மருத்துவப் பண்ணைகள் அமைத்தல்

* 8889 **திரு. எம். அண்ணாமலை :**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியங்கள்தோறும் சித்த மருத்துவப் பண்ணைகள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.